ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2394/06 - 2024 ජූලි මස 22 වැනි සඳුදා - 2024.07.22

*2394/06 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

**53 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 53 இன் படி எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் அடிப்படையில், முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் பரிந்துரையை கருத்திற் கொண்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பேரில்-

(அ) அமைச்சரவை, அதன் 2024, யூலை 09 ஆந் திகதியுடைய 24/1304/631/032 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் இதற்கான அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட நபரின் வியாபாரத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாக நியமிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது எனவும்;

(ஆ) அத்தகைய வியாபாரத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாகக் கருதுவதற்கான காரணம் இதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகவுள்ளது எனவும்;

(இ) சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் இதன் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகவிருத்தல் வேண்டும் எனவும்; அத்துடன்

(ஈ) குறிப்பிடப்பட்ட சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் இதன் அட்டவணை IV இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் தொடங்குதலும் நடைமுறையில் இல்லாதொழிதலும் வேண்டும் எனவும்,

இக்கட்டளை மூலம் குறித்துரைக்கின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்.

கொழும்பு,
2024, யூலை 19.

1A - PG 6772 — 289 (2024/07)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை I

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாக நியமிக்கப்பட்ட வியாபாரத்தின் விபரங்கள்**

| | |
|---|---|
| 1. அதிகாரமளிக்கப்பட்ட நபரின் பெயர் | ஹொரைசன் குரூப் யூஎஸ்ஏ குளோபல் எல்எல்சீ (HORIZON GROUP USA GLOBAL LLC) |
| 2. உரிம இலக்கம் | 2310250022 |
| 3. உரிமம் வழங்கப்பட்ட திகதி | 2023, திசெம்பர் 1<br><br>வியாபாரம் ஆரம்பிக்கின்ற திகதி உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் இருக்க வேண்டும் (2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அதிகாரமளிக்கப்பட்ட நபர்களின் பதிவு செய்தல், உரிமம் வழங்குதல், அதிகாரமளித்தல் மற்றும் ஏனைய அங்கீகாரங்கள் என்பவற்றிற்காக ஒழுங்குவிதிகளின் 27 ஆம் ஒழுங்குவிதியைப் பார்க்கவும்) |
| 4. கரைகடந்த கம்பனி பதிவிலக்கம் | PCC00287820 |
| 5. செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபார வகைப்படுத்தல் | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரம் |
| 6. விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களுக்கான தகவுடமை | HORIZON GROUP USA GLOBAL LLC என்பது செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாக மாத்திரமே நியமிக்கப் பட்டுள்ளது. செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரமாக நியமிக்கப்படுவதற்கு தகுதி பெறமாட்டாது. |
| 7. தகவுடமைக் கட்டளைகள் | 2023, ஓகத்து 04 ஆந் திகதியுடைய 2343/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான வழிகாட்டுநெறிகள்) ஒழுங்குவிதி களின் 4(2)(ஈ), (உ), (ஐ), (ஒ) மற்றும் 4(3)(அ) ஒழுங்குவிதிகளில் குறிப்பிட்ட கட்டளைகள். |
| 8. ஏற்புடைய விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு திட்டம் | 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப் புக்களை வழங்குவதற்கான வழிகாட்டுநெறிகள்) ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பிட்ட திட்டம் |

## அட்டவணை II

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாக கருத்தில் கொள்ளப்படுவதற்கான காரணம்**

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்கள், அச்சட்டத்தின் பிரிவு 53 (5) இல் கூறப்பட்டுள்ளவாறு தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, கொழும்புத் துறைமுக நகரத்தை ஸ்தாபிப்பதன் வெற்றியை உறுதி செய்வதற்காக வியாபாரங்களை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாக நியமிப்பதில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

HORIZON GROUP USA GLOBAL LLC ஐக்கிய அமெரிக்காவில் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். 1912 இல் நிறுவப்பட்ட கைவினை மற்றும் சிறப்பு சந்தைகளுக்கான நவநாகரிக உந்துதல் தயாரிப்புகளின் முன்னணி தயாரிப்பாளர், விருத்தியாளர் மற்றும் விநியோகஸ்தரான Horizon Group USA Inc நிறுவனத்தின் முழு உடைமையுடைய துணை நிறுவனமாகும், இது குழந்தைகளின் கலை மற்றும் கைவினைக் கூறுகள், செயல்பாட்டுக் கருவிகள், படைப்பாற்றல் பொம்மைகள், நவநாகரிக எழுதுகருவிகள், பாடசாலை பொருட்கள், செல்லப்பிராணி உபகரணங்கள், கொண்டாட்டம் மற்றும் விருந்துப் பொருட்கள் மற்றும் மாணவர் விசாரணை, உரையாடல் மற்றும் விமர்சன சிந்தனைக்கு வழிகாட்டுவதற்காக விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலைகள் மற்றும் கணிதம் போன்ற புத்தாக்க கல்விக் கருவிகள், அறிவியலைப் பயன்படுத்தும் கல்வி அணுகுமுறை ஆகியவை இதில் அடங்கும்.

ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 200 மில்லியனுக்கும் அதிகமான வருடாந்த விற்பனைப் புரள்வுடன், Horizon Group USA Inc உலகளாவிய ரீதியில் சுமார் 400 தொழில் வல்லுநர்களைப் பயன்படுத்தும் அதே வேளையில், வோல்மார்ட், டெஸ்கோ மற்றும் கொஸ்ட்கோ ஹோல்சேல் போன்ற முக்கிய சில்லறைச் சங்கிலிகள் உட்பட பரந்த வாடிக்கையாளர் தளத்திற்கு சேவை செய்கிறது.

HORIZON GROUP USA GLOBAL LLC நிறுவனமானது அண்ணளவாக ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 1,200,000 தொகை முதலீட்டு அர்ப்பணிப்புடன் செயற்பாட்டின் ஆரம்ப 3 வருடங்களுக்குள் அண்ணளவாக 31 ஊழியர்களை பணிக்கமர்த்துகின்ற அதே நேரம், Horizon Group USA Inc நிறுவனத்திற்கு நிதி, திட்டமிடல், சந்தைப்படுத்தல் பின்தள செயற்பாடுகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகளை வழங்கி கொழும்புத் துறைமுக நகரத்திற்குள் குறிப்பிட்ட காலத்தில் உலகளாவிய பகிரப்பட்ட சேவை மையமாக செயற்படும்,

மேலும், HORIZON GROUP USA GLOBAL LLC நிறுவனம் அதன் நீண்ட காலத்தில் கொழும்புத் துறைமுக நகரத்தை உலகளாவிய வளங்களை அளிக்கின்ற நடவடிக்கைகளுக்கான மைய நிலையமாக மேம்படுத்தி ஐரோப்பிய மற்றும் ஆசிய சந்தைகளுக்கு சாத்தியமான வணிக விரிவாக்கங்களை எளிதாக்கும் வகையில் கொழும்புத் துறைமுக நகர நடவடிக்கைகளை விரிவாக்கலாம்.

**அட்டவணை III**

**சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள்**

| சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள் | வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் |
|---|---|
| 1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | அ) பகிர்ந்தளிக்கப்படுகின்ற சகல வருமானம், இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் என்பவை இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படும்.<br><br>ஆ) மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுப்பனவுகளும் இந்த சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வியாபார ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகள் மற்றும் சகல உள்நாட்டு கொள்வனவுகளும், இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட வரிகளிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வியாபார ரீதியான பொருட்களின் சகல இறக்குமதிகள் மற்றும் சகல உள்நாட்டு கொள்வனவுகளும், இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |

| | |
|---|---|
| 6. சுங்க கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235) | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வியாபார ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரிச் சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வியாபார ரீதியான பொருட்களின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வியாபார ரீதியான பொருட்களின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | இச்சட்டத்திலிருந்து விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட மாட்டாது. |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும் |
| 11. களியாட்ட வரி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 267) | இச்சட்டத்திலிருந்து விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்கப்படமாட்டாது |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அந்நியச் செலாவணிச் சட்டம் | 2022, யூன் 03 ஆம் திகதியுடைய 2282/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வெளிநாட்டு நாணய மாற்றல் (கொழும்புத் துறைமுக நகரத்தில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் தவிர இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கெசினோ வியாபார (ஒழுங்குவிதி) சட்டம் | இச்சட்டத்திலிருந்து விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்கப்படமாட்டாது |

**அட்டவணை IV**

**வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களின் செல்லுபடியாகும் காலம்**

| சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள் | ஆரம்பிக்கின்ற திகதி | முடிவடைகின்ற திகதி |
|---|---|---|
| 1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் பெறுமதிசேர் வரிச் சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 6. சுங்க கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235) | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரிச் சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |

| **சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள்** | **ஆரம்பிக்கின்ற திகதி** | **முடிவடைகின்ற திகதி** |
|---|---|---|
| 11. களியாட்ட வரி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 267) | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அந்நியச் செலாவணிச் சட்டம் | 2024 யூலை 15 | 2049 யூலை 14 |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குவிதி) சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

EOG 07 - 0200

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.